**தேதி :** 02.03.2026 **SC.No. :** 496/2021 PW :1 விஸ்வநாதன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளேன். எதிரி என்னுடைய நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் 200 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். கோவில் நிகழ்ச்சியில் மஞ்சள்நீராட்டு விழா நடந்தது என்றால் சரிதான். மஞ்சள் நீர் ஊற்றும் போது ஆட்கள் சிதறி ஓடினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நான் ஓடும்போது கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். முருகன், கிருஷ்ணன் ஆகியோர்களுக்கும் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி என்னை அவதூறான வார்த்தைகள் பேசவில்லை என்றாலும், கொலை செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.03 19:05:14 +0530

**தேதி :** 02.03.2026 **SC.No. :** 496/2021 PW :2 முருகையா

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளேன். எதிரி என்னுடைய நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் 200 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். கோவில் நிகழ்ச்சியில் மஞ்சள்நீராட்டு விழா நடந்தது என்றால் சரிதான். மஞ்சள் நீர் ஊற்றும் போது ஆட்கள் சிதறி ஓடினார்கள் என்றால் சரியல்ல. இதே சம்பவத்தில் நானும், என் தரப்பைச் சார்ந்த வெங்கலமுத்து, முருகதாஸ், கருப்பசாமி, கிருஷ்ணன், விஸ்வநாதன் ஆகியோர்கள் மீது செல்வக்கனி என்பவர் கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் மஞ்சள் நீர் ஊற்றும் போது சிதறி ஓடியதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

போலீசார் விசாரணையில் ராமர் என் தலையின் பின்பகுதியில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். லட்சுமணன் கல்லால் எறிந்து தலையின் மத்தியில் காயம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரியின் மீது ஏற்பட்ட தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. அவதூறான வார்த்தைகள் பேசவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.03 19:05:21 +0530

**தேதி :** 02.03.2026 **SC.No. :** 496/2021 PW :3 கிருஷ்ணன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல்விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளேன். எதிரி என்னுடைய நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் 200 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். கோவில் நிகழ்ச்சியில் மஞ்சள்நீராட்டு விழா நடந்தது என்றால் சரிதான். மஞ்சள் நீர் ஊற்றும் போது ஆட்கள் சிதறி ஓடினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் ஓடும்போது கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

இதே சம்பவத்தில் நானும், என் தரப்பைச் சார்ந்த வெங்கலமுத்து, முருகதாஸ், கருப்பசாமி, முருகையா, விஸ்வநாதன் ஆகியோர்கள் மீது செல்வக்கனி என்பவர் கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் மஞ்சள் நீர் ஊற்றும் போது சிதறி ஓடியதில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

போலீசார் விசாரணையில் முருகன் கல்லால் எனது வலதுபக்க உதட்டின் கீழ்பகுதியில் அடித்து வீக்ககாயம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஐயப்பன் கல்லால் எறிந்து வலது பக்க மணிக்கட்டில் ஊமைக்காயம் ஏற்படுத்தியதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னை தாக்கவில்லை என்றால் கூட்டத்தில் யார், யார் அடித்தார்கள் என்று என்னால் சரியாக பார்க்கமுடியவில்லை. எதிரியின் மீது ஏற்பட்ட தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நான்

பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. அவதூறான வார்த்தைகள் பேசவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

**இல்லை.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.03 19:05:31 +0530